விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஐப்பசி 1 முஹற 21 இதழ் 245
யாழ்ப்பாணம் புதன்கிழமை 17-10-84

## யாழ். பெற்றேர் சங்கத்தினர் நாளை நடத்தும் ஊர்வலம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். பெற்றோர் சங்கத்தினர் நாளை வியாழக்கிழமை காலை யாழ். கச்சேரிக்கு ஊர்வலமொன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

அரசு தமிழ்ப் பிள்ளைகளின்கல்விவிஷயத்தில் பாராமுகமாக இருப்பதை ஆட்சேபித்து இந்தஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பெற்ரேர் ஊர்வலமாகச் சென்று யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் மகஜரொன்றைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

ஊர்வலம் புறப்படும் இடம் இன்னும் முடிவு செய்யப்படவில்லையென்று கூறப்படுகிறது.

## இராணுவம் பலத்த சோதனை

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் கிழக்கு - நந்தாவில் அம்மன் கோவிலில் உள்ள வீடுகள் நேற்று இராணுவத்தினரால் பலத்த சோதனையிடப்பட்டன. இதனுல் இப்பகுதியில் பெரும் பதட்ட நிலை

(5-ம் பக்கம் பார்க்க)

# எம்.ஜி.ஆர்.சுகமடைகிருர் இந்திரா நேரில் விஜயம்



(சென்னை)

**சென்னையிலுள்ள 'அப்பலோ' மருத்துவ மனையில் சிகிச்சைபெற்றுவரும் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனை இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேற்றுப் பிற்பகல் மருத்துவமனைக்குச் சென்று பார்வையிட்டு, அவருடன் சுமார் பத்து நிமிடங்கள்வரை பேசினுர். பிரதமர் இந்திரா காந்தியைக் கண்டதும் முதலமைச்சர் சிறிய உதவியுடன் எழுந்து உட்கார்ந்து, மிகவும் கஷ்டப்பட்டு பிரதமருடன் சில வார்த்தைகள் பேசினுர்.**

முதலமைச்சருடன் திருமதி இந்திரா காந்தி சில நிமிடங்கள் உரையாடியதன் பின்னர் முதலமைச்சருக்குச் சிகிச்சை அளித்துவரும் டாக்டர்களுடன், அவரது உடல்நிலை குறித்து ஆலோசனை நடத்தினுர். முதலமைச்சரின மனைவி திருமதி ஜானகியுடனும் பிரதமர் சிறிதுநேரம் பேசினுர்.

## பிரதமர் பாராட்டு

சென்னை ராஜ்பவனில் நிருபர்கள் மத்தியில் பேசிய திருமதி இந்திரா காந்தி, ''திரு. எம். ஜி. ராமச்சந்திரன் உறுதியும், வீரமும் நிறைந்தவர். எந்தச் சிக்கலான பிரச்னைகளையும் நிதானமாகச் சமாளிக்கும் வல்லமை வாய்ந்தவர். இத்தகைய வல்லமை பொருந்திய அந்த மனிதர் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையையும் வெற்றியுடன் சமாளிப்பார்'' என்று கூறினுர்.

''முழு இந்தியாவுமே அவர் சுகமடையவேண்டும் என்று பிரார்த்திக்கிறது. அந்த மக்களுடன் சேர்ந்து நானும் அவரது நலத்துக்குப் பிரார்த்திக்கிறேன்'' என்றும் பிரதமர் இந்திரா காந்தி கூறினுர்.

''திரு. எம். ஜி. ராமச்சந்திரனுக்கு எத்தகைய உதவி தேவைப்படுகிறதோ அவை அனைத்தையும் வழங்க மத்திய அரசு தயாராக இருக்கிறது. இதுவிடயமாக மத்திய அரசினுல் வழங்கக்கூடிய அத்தனை உதவிகளும் உடனடியாக வழங்கப்படும். அமெரிக்காவுக்கு அவரை அழைத்துச் செல் து, டாக்டர்களின் ஆலோசனையைப் பொறுத்தே மேற்கொள்ளப்படும் டாக்டர்கள் என்ன கூறுகிருர்களோ அதற்கேற்பவே நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்'' என்றும் பிரதமர் கூறினுர்.

நேற்று விசேட விமானத்தில் சென்னை வந்தபிரதமர் திருமதி காந்தியுடன் வெளியுறவு இலாக கொள்கைகுழுத் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதி, பிரதமரின் சிறப்புச் செயலாளர் திரு. அலெக்சாண்டர் ஆகியோரும் வந்திருந்தனர்.

## அமெரிக்க டாக்டர்கள்

திரு, எம் ஜி. ராமச்சந்திரனுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அமெரிக்காவைச் சேர்ந்த 4 நரம்பியல், சிறுநீரகவைத்திய நிபுணர்கள் நியூயோர்க்கில் இருந்து புறப்பட்டு நேற்று இரவு புதுடில்லிவந்து சேர்ந்தார்கள்.

இந்த நிபுணர்களுக்கு முதலமைச்சரின் உடல்நிலையையும், அவருக்கு ஏற்பட்ட நோயையும் முன்கூட்டியேவிளக்குவதற்காக மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டேயும் மற்றெரு டாக்டரும் புதுடில்லி சென்றுள்ளார்கள்,இவர்களுடன் வைத்திய ஆலோசனை நடத்திவிட்டு அமெரிக்க வைத்திய நிபுணர்கள் இன்றுகாலை சென்னை அப்பலோ மருத்துவமனைக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை முதலமைச்சர் எம். ஜி ராமச்சந்திரனின் உடல்நிலை மருத்துவரீதியில் ஸ்திரமாக இருக்கிறது என்று அவருக்குசிகிச்சை அளித்துவரும் டாக்டர் பிரதாப் செட்டி நேற்றுஇரவு தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் அமைச்சர் எச். வி. ஹண்டே வெளியிட்ட மருத்துவ அறிக்கையில், நேற்றுமுன்தினமிரவு அவருக்கு அளிக்கப்பட்ட இரத்த சுத்திகரிப்பு சிகிச்சையின் பின்னர் அவர் நன்ருக தூங்கினுரென்றும் அவரது இதயமும், சுவாசமும் சீராக இயங்கின்றன என்றும் அவரது இரத்தத்தில் யூரியாவின் அளவு குறைந்திருக்கிறது. அவர் திருப்திகரமாகவும் நல்ல நிலையில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

முதலமைச்சருக்கு அருகில் இருந்து பம்பாயில் இருந்து வந்த சிறுநீரக டாக்டர்களும், மருத்துவமனை டாக்டர்களும் தக்க மருத்துவ உதவி அளிந்து வருகிருர்கள்.

## ராமராவ் பார்வையிட்டார்

ஆந்திரா முதலமைச்சர் திரு. என். டி. ராமராவ் நேற்று சென்னை அப்பலோ மருத்துவ மனைக்குச் சென்று, முதலமைச்சர் எம். ஜி. ராமச்சநதிரனின் உடல்நிலை குறித்து விசாரித்து அறிந்து கொண்டார். திராவிடக்கழக தலைவர் திரு வீரமணி, செல்வி ஜெயலலிதா ஆகியோரும் மருத்துமனைக்கு சென்று முதலமைச்சரின் உடல்நிலை குறித்து விசாரித்தனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## தீர்வையற்ற கடைகளில் திடீர்த் தீ!

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியிலுள்ள சுங்கத் தீர்வையற்ற கடையின் கட்டிடத் தொகுதியில் 4-வது மாடியில் நேற்று இடம்பெற்ற தீ விபத்தில் பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து சாம்பராகியுள்ளன.

கட்டிடத் தொகுதியில் நேற்றிரவு 6 மணிக்குத் தொடங்கிய இத்தீ 8 மணியளவில் அணைக்கப்பட்டது.

கட்டிடத் தொகுதியிலுள்ள 12 கடைகளும் எரிந்துள்ளன.

மின்சாரக் கோளாறினுல் இத்தீ ஏற்பட்டதெனப் பொலிசார் தெரிவித்தனர்.

## வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தம்

[கொழும்பு]

வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் ஊழியர்கள் இன்று முதல் பொது வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

ஊழியர்களின் சம்பள உயர்வு மற்றும் சில கோரிக்கைகள் தொடர்பாகவே ஊழியர்கள் பொது வேலை நிறுத்தம் செய்கின்றனர்.

## நீர்த்தேக்கத் திட்டத்தில் பலவந்தமாக நுழைய முயன்ற மூவர் கைது!

[கண்டி]

மாதுறுஓயா நீர்த்தேக்கத்தில் பலவந்தமாக நுழைய முயன்றதாகக் கூறப்படும் மூன்று தமிழ் இளைஞர்கள் பாதுகாப்புப்படையினரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில்; இம்மூவரும்

(5ம் பக்கம் பார்க்க)

## ரயில் நிலையத்தில் 40,000 கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

புளியங்குளம்புகையிரத நிலையத்தில் ஆயுதம் தாங்கிய 3 இனந்தெரியாத இளைஞர்கள் 40,493 ரூபா 46 சதத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நேற்று நண்பகல் 12-30 மணியளவில் இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

மோட்டார்சைக்கிளில் வந்த இனந்தெரியாத இளைஞர்கள் துப்பாக்கி முனையில் ஊழியர்களையும் புகையிரத நிலைய அதிபரையும் பயமுறுத்திவிட்டு, தொலைபேசி வயர்களைத் துண்டித்ததாகவும் பின்னர் ரொக்கப் பணத்தைக் கொள்ளையடித்துக்கொண்டு சென்றுவிட்டதாகவும் பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது (மா)

## எம். ஜி. ஆர். சுகமடைய ஆணையாளர் தந்தி

[யாழ்ப்பாணம்]

தமிழக முதலமைச்சர் திரு. எம் ஜி. இராமசந்திரன் குணமடையப் பிரார்த்திப்பதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு சீ.வீ.கே சிவஞானம் நேற்றுத் தந்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்

தமிழக நிதியமைச்சர் திரு

[5-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பளையில் 15 ஏக்கர் காணி (9 ஏக்கரில் இளம் தென்னை மரங்களும், கிணறும் உண்டு) விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இல: 225, C/o, ஈழநாடு. 225

புத்தம்புதிய 'KUBOTA-75, லான்ட் மாஸ்டர் இயந்திரம் கலப்பையுடன் விற்பனைக் குண்டு, செல்வநாயகம்— எல்லுமுள்ளி, மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். (M. O. H. ஒழுங்கை) (122)

QL17ஜேர்மன் Cannonகமரா, 6×4 போமிக்கா பதிக்கப்பட்ட சப்பாட்டு மேசையும், ஆறு கதிரைகளும் (Highest offer) புதிய கென்வூட் Chef (தீர்வை யில்லாக் கடை விலை) ஒட்டு வீட்டுக்குரிய பனை மரங்கள், சிலாகைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: த. தம்பித்துரை, 'தவவாசம்', வறுத்தலைவிளான் தெல்லிப்பழை. 227

முத்திரைச்சந்தை, செம்மணி ரோட் கல்விஇலாகாவுக்கு அருகாமையில் செல்லர் வீதியில் 3 வீடு கட்டக்கூடிய காணித் துண்டுகள் ஒருமித்து அல்லது தனித்தனியாக விற்பனைக் குண்டு. பரப்பு 125,000/-மட்டில். தொடர்பு: ந. கிருஷ்ண சாமி, உலாந்தா, தபால் நிலையத்துக்கு அண்மையில், நீர்வேலி. 179

மாட்டீன் ரோட், மேற்கு ஒழுங்கையில் 1½ பரப்பு வீடும் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 9/4, வேம்படிவீதி, யாழ்ப்பாணம். 243

நிலாவரை அற்பை ரோட்டில் ஆறு பரப்பு வீடு வளவும், ஒன்பது பரப்பு தோட்டமும் (ரோட்டுக்கு அருகாமையில்) விற்பனைக்குண்டு. விண்ணப் பிக்கவும். விளம்பர இல: 222, C/o, ஈழநாடு லிமிட்., யாழ்ப் பாணம், 222

தஞ்சாவூர் புதிய வீணைகள் மீண்டும் விற்பனைக்கு வந்து விட்டது. தொடர்பு: திருமுறை மன்றம், 31/12, சங்கிலியன் வீதி, நல்லூர். 248

கடற்கரை வீதி, பருத்தித் துறையில் வெளிச்ச வீட்டிற்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடும் 9½ பரப்புக் காணியும் உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: திருமதி R. A. ராஜசிங்கம், 14/2, பிளெச்சர் வீதி, சுண்டிக்குளி. 235

## தேவை

பாண், பணிஸ், கேக் தயாரிப்பதில் அனுபவமும், திறமையுமுள்ள பாஸ் ஒருவர் எங்கள் பேக்கரிக்குத் தேவை. உடன்நேரில் வரவும். திறமைக் கேற்ற சம்பளம் வழங்கப் படும். ஹோட்டல் றெலெக்ஸ் 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப் பாணம். 247

45—55 வயதிற்கிடைப் பட்டவான் சாரதி தேவை. அத்தாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். அ. சௌந்தரராசா, 36, மெமோரியல் ஒழுங்கை. மானிப்பாய். 232

அச்சகத்துக்குரிய சிறிய அளவிலானபேப்பர்கட்டிங்மெஷின் ஒன்று உடன் வேண்டும். இ சங்கர், 428, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23853. 239

## தேவை

லொறிச்சாரதி 5வருட அனுபவமிக்க நேர்மையானவர்கள் மட்டும் நற்சாட்சிப் பத்திரங் களுடன் நேரில் விண்ணப்பிக் கவும். சு. பாலேந்திரா 586, கண்டிரோட், அரியாலை, யாழ்ப் பாணம். 251

## சேவை

கட்டுடையிலிருந்து யாழ்ப் பாணத்திற்கும், உடுவிலிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் மாணவர்களுக்கு வான்சேவை செய்து கொடுக்கப்படும். விளம் பர இல: 233, C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். 233

## FOR SALE

16 Lachems Coconut Land with. two roomed house and well Just bearing 300 yds from Navatkuli Railway Station along Kandy Rd- 1½ Lachems. 403 Car Susuki 125 and imported drawing Room suit. A. C. George, 480, Navalar Rd, Nallur. 231

## கல்வி

யாழ். மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் 6-ம் தரப் பிரவேசப்பரீட்சை 24-11-84. விண்ணப் முடிவு திகதி 19-10-84. கடந்தகாலப் பரீட்சைகளின் 10 வினுத்தாள் களும் 30 தமிழ்க்கட்டுரை களும் கொண்ட பரீட்சைத் துணைநூல் ரூபா 12/50. கிடைக்குமிடங்கள்:-ஸ்ரீலங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். 213

வயறிங், மோட்டார் மெக்கானிசம் காலை வகுப்புகள் கிழமை நாட்களில் நடைபெறுகிறது. புதிய மாணவர்கள் 18-10-84ல் சேர்க்கப்படுவார்கள். தொடர்பு கொள்க; பொறியியல் கல்வி நிலையம், Engineering Education Centre, புதிய மேல்மாடிக் கட்டிடம், சம்பந்தன் வைத்தியசாலை பக்கம், சாந்திசினிமா அருகாமை, 22, ராமையா செட்டியார் லேன், யாழ்ப்பாணம். விரிவுரையாளர்: S C. இம்மானுவேல், B.Sc. (Cey), Electrical and Automobile Engineer. 226

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

நிகழும் இரத்தாட்சி வருடம் ஐப்பசி மாதம் 4ம் திகதி (20-10-84) சனிக்கிழமை மாலை 2-02 மணி முதல் 3-38 வரையுள்ள சுப வேளையில் (பிரான்ஸ் நேரம் மாலை 6-32 முதல் 8-08) திரு. கு. சுரேந்திரன் அவர்களின் இல்லத்தில்

| | |
|---|---|
| காலம் சென்ற<br>திரு. சு. சுப்பிரமணியம்<br>தம்பதிகளின்<br>கனிஷ்ட புதல்வன்<br>[முன்னுள் உரிமையாளர் இலக்ஸ்மி மில், வவுனியா]<br>**ஸ்ரீ கிருஷ்ணராஜா**<br>(பாலன்)<br>அவர்களுக்கும் | கை. மங்களேஸ்வரன்<br>தம்பதிகளின்<br>[நீர்பாசன அலுவலகம், வவுனியா]<br>சிரேஷ்ட புதல்வி<br>**மங்களசுந்தரி**<br>(தவம்) க்கும் |

இந்து சமய ஆசார முறைப்படி பிரான்சில் திருமணம் நடைபெற திருவருள்கூட்டி இருப்பதால் இம்மங்கள காரியத்தை இலங்கை, மலேசியா ஆகிய இடங்களில் உள்ள உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தெரியப் படுத்துவதோடு, மணமக்களை ஆசீர்வதிக்கும்வண்ணம் வேண்டுகிறோம்.

கை. மங்களேஸ்வரன் தம்பதிகள்
குருமன்காடு, வவுனியா.

G. SURENDREN,
27, Rue De Tanger,
Paris 75017,
France.

S. SRISKANDARAJ,
76, A, Stork Road,
Forest Gate,
London E 7, U. K.

(242)

UNIQUE COMMUNICATION SERVICE

## யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில்
தெளிவான சர்வதேச
தொலைபேசி ரெலெக்ஸ்
அழைப்புகளுக்கு
இன்றே நாடுங்கள் - யுனிக்

## 24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28/18 - 1/1 மகாத்மா காந்தி ரோட்,
(சலுசலவுக்கு அண்மையில்)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ் - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸ்திரேலியா கட்டிடம்
த.பெ 1917, 54 யோர்க் வீதி, கொழும்பு :
ரெலெக்ஸ். - 21652, 21742 21918 21931, PERIMR CE
தொலைபேசி: - 22726 547884, 548626, 549065, 549066

## அதிஷ்டஇலாபச் சீட்டு

கோயிலாக்கண்டி ஸ்ரீகிருஷ்ணன் கோயில் அதிஷ்ட இலாபச் சீட்டு 7-10-84ல் அதிஷ்டம் பார்க்கப்பட்டது. பரிசு பெற்றோர் சீட்டு இலக்கம்:

1-ம் பரிசு: 642
2-ம் பரிசு: 561
3-ம் பரிசு: 678 (237)

## அறிவித்தல்

அரியாலை திருமகள் சன சமூக நிலையத்தில் 13-10-84-ல் குலுக்கப் பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டு முதல் மூன்று பரிசு இலங்கங்கள் வருமாறு:

384, 562, 839.

(250) —செயலாளர்

### யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை

## வழங்குனர்களைப் பதிவு செய்தல் — 1985

01. 1985-ம் ஆண்டுக்குப் பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையுடன் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரசித்தி பெற்ற வழங்குனர்கள், ஒப்பந்தகாரர்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
02. ஒவ்வொரு இனவகைப் பொருட்களை விநியோகிப்பதற்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.
03. விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபால் மூலம் "மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கு 26-11-1984 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக உரிய பதிவுக்கட்டணம் / வைப்புப் பணம் ஆகியவற்றுடன் அனுப்பப்படல் வேண்டும், விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்குனர்களைப் பதிவு செய்தல் 1985" எனத் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்,
04. பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் பட்டியலில் இருந்து வழக்கமாகக் கேள்விகள் கோரப்படும். ஆனாலும் தேவைகளைப் பொறுத்து வேறு வழங்குனர்களிடமிருந்து கூறுவிலையைப்பெற்று பொருட்களைக் கொள்வனவு செய்ய இச் சபைக்குப் பூரண உரிமையுண்டு.
05, நேரகாலத்துக்குக் கூறுவிலைகள் அனுப்பவோ அல்லது கட்டளைகளை நிறைவேற்றவோ தவறும் அல்லது வழங்கப்பட்ட பொருட்கள் விபரக் கூற்றுகட்கு அல்லது மாதிரிகளுக்கு அமையாத விடத்தும், அத்தகைய வழங்குனர்களின் பதிவுகள் வழங்குனர் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுவதுடன் வைப்புப் பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.
06. அரசாங்கத் திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியன பதிவுக்கட்டணம், வைப்புப் பணமும் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

| | பொருட்கள் | வைப்புப் பணம் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|---|
| | ............ | ........ | .......... |
| | **பொது** | | |
| 1. | காகிதாதிகள் அச்சடித்தல் வேலைகள் | 250/- | 50/- |
| 2. | அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் | 250/- | 50/- |
| 3. | சுகாதாரப் பொருட்கள் (மலசலகூட, தோட்டி வீதிவேலை ஆகியவற்றுக்கான களஞ்சியப்பொருட்கள்) கோலவுடை ஆகியன | 250/- | 50/- |
| 4. | பவுசர், டிராக்டர் ஆகியவற்றுக்கான உதிரிப்பாகங்கள் மற்றும் இரும்புவகைப் பொருட்கள் | 250/- | 50/- |
| 5. | அலுவலக உபகரணம், தளபாடம் ஆகியவற்றுக்கான திருத்த வேலைகள் | 250/- | 50/- |
| 6. | வாகன மிருகவரித் தகடுகள் | 250/- | 50/- |
| | **மின்சாரம்** | | |
| 1. | மின்சேவை இணைப்புகள், வீதி வெளிச்சம் மின் உப நிலையங்கள் ஆகியவற்றுக்கான உபகரணங்கள் | 1000/- | 100/- |
| 2. | பி. வி சி. மின்வடங்கள், கடத்திகள் | 1000/- | 100/- |
| 3. | வலுவூட்டப்பட்ட கொங்கிறீற் மின்கம்பங்கள் | 1000/- | 100/- |

மு. பஞ்சலிங்கம்,
செயலாளர்,
யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை,

யாழ். அபி. சபை அலுவலகம்,
செயலகம், யாழ்ப்பாணம்,
1984-10-05. (249)

# பாகிஸ்தான்மீது இந்தியா ஆக்கிரமிப்பு நடத்துமா?

## அமெரிக்கத் தூதர் கூற்றுக்கு கண்டனம்

(புதுடில்லி)

பாகிஸ்தானுக்கு பாரதம் அபாயத்தை ஏற்படுத்தக் கூடும் என்று இந்த நாட்டைச் சித்தரித்துக் காட்ட எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு இந்தியா பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிராக ஆக்கிரமிப்பு நடத்தப் போவதாக அமெரிக்கத்தூதர் இஸ்லாத்தில் கூறியிருப்பதனை இந்திய வெளிநாட்டுச் செயலாளர் ரல்கோத்திரா வன்மையாகக் கண்டித்திருப்பதுடன், அதனை மறுத்துள்ளார்.

''அமெரிக்கத் தூதரின் அறிக்கை உள்நோக்கமுடையது: கண்டிக்கத்தக்கது'' என்று கூறினர்.

அதிநவீன ஆயுதங்களை பாகிஸ்தானுக்கு வழங்குவதற்கான தமது நடவடிக்கைக்கு நியாயம் கற்பிக்கவே இவ்வித கருத்தை அமெரிக்கத்தூதர் வெளியிட்டிருக்கிறார் என்றும் இந்திய வெளிநாட்டுச் செயலாளர் தெரிவித்தார்.

இந்தியா கடும் விமானத் தாக்குதலைப் பாகிஸ்தான் மீது நடத்தப்போவதாக வாஷிங்டனில் பாகிஸ்தான் வெளியுறவு மந்திரி தெரிவித்துள்ளதையும் சுட்டிக்காட்டி, சுமூகமான சூழ்நிலை ஏற்படுவதைத் தடுத்து, பதற்றத்தை உருவாக்கவே இப்படியான நடவடிக்கை எடுக்கப்படுவதாகச் சொன்னர்.

# சிரிய ஜனதிபதி அஸாத் சோவியத் பயணமானர்!

மாஸ்கோ அக், 16

சிரியா நாட்டு அதிபர் அஸாத் நான்கு ஆண்டுகளுக்கு பின்னர் சோவியத் யூனியனுக்கு பயணமாகியுள்ளார்.

இவர் சோவியத் யூனியனில் சோவியத் ஜனதிபதி கொன்ஸ்ரைன்ரின் செர்னென்கோ, வெளியுறவு அமைச்சர் அந்ரி குரோமிக்கோ மற்றும் கிரெம்ளினின் உயர்தலைவர்களையும் பாதுகாப்பு அதிகாரிகளையும் சந்தித்துப் பேசுவார்என எதிர்பார்க்கப்படுகிறது.

முக்கியமாக மத்திய கிழக்கு விவகாரம் தெற்கு லெபனனில் நிலைகொண்டிருக்கும் இஸ்ரேலியப்படைகளின் வெளியேற்றம், லெபனனின் எதிர்காலம் என்பன குறித்தும் இவர் சோவியத்தலைவர்களுடன் பேசுவார்.

மத்திய கிழக்கில் தனது செல்வாக்கை சோவியத் யூனியன் தீவிரமாக அதிகரித்து வரும் வேளையில் சிரியா அதிபரின் இந்த விஜயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

சோவியத்யூனியனும் சிரியாவும் பாதுகாப்புத்துறையில் நெருங்கியநட்பு நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# எம். ஜி. ஆரைப் பார்க்க இந்திரா காந்தி வரலாம்!

## கலைஞர், மூப்பனர் சிவாஜி மருத்துவமனை சென்றனர்!!

(சென்னை)

தமிழக முதல்வர் திரு எம். ஜி. ராமச்சந்திரனுக்கு இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது. பம்பாயிலிருந்துவந்த நரம்பியல் நிபுணர் டாக்டர் வார்டியா, முதல்வருக்குச் சிகிச்சையளிக்கும் டாக்டர் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், பூரண சோதனை செய்து, முறையான சிகிச்சையளிக்கப்பட்டிருக்கிறதென்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிலிருந்து நான்கு வைத்திய நிபுணர்கள் விரைந்து கொண்டிருப்பதாகவும் அநேகமாக இன்று காலைக்கு முன்னதாக வந்து சேர்ந்துவிடுவார்களென்று இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் திரு வாஜ்பாய் மாநில அரசுக்கு அறிவித்துள்ளார். அமெரிக்க இந்திய நிபுணர்களான மேயர், கிறிஸ்தோபர் பிளாக், பிளைவ், பிரைட்மன் ஆகியோரே எம். ஜி. ஆருக்குச் சிகிச்சை அளிக்க வருகின்றனர். அமெரிக்காவிலிருந்து புறப்பட்டு விட்டார்களென்றும், இன்று காலைக்கு முன்னதாக எந்த நேரத்திலும் அவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றார்களென்றும் தெரிவிக்கப்பட்டது.

### இந்திரா வரலாம்

இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி எம். ஜி. ஆரைப்

[7ம் பக்கம் பார்க்க]

# நெதர்லாந்து பயணம்

(வவனியா)

வவனியா முல்லைத்தீவு மாவட்ட சர்வோதய இணைப்பாளர் திரு. க. கதிரமலை நெதர்லாந்து சென்றுள்ளார்.

வவனியா, முல்லைத்தீவு கிளிநொச்சிப்பகுதிகளில் குடியமர்த்தப்படவிருக்கும் அகதிகள் விடயம் தொடர்பாக அங்குள்ள தொண்டர் ஸ்தாபன பிரதிநிதிகளுக்கு விளக்கிக் கூறவே திரு கதிரமலை அங்கு பயணமாகியுள்ளார்.

அமெரிக்கா லண்டன் ஆகிய நாடுகளுக்கும் இவர் செல்லவுள்ளார்.

## உத்தரபிரதேசம், திரிபுராவில்——

# மீண்டும் கொந்தளிப்பு!

[புதுடில்லி]

வடஇந்திய மாநிலமான உத்திர பிரதேசத்திலும் வடகிழக்கு மாநிலமான திரிபுராவிலும் ஏற்பட்ட கொந்தளிப்பில் நான்கு பேர் கொலையுண்டனர் 18 பேர் காயமடைந்தனர்.

உத்திரபிரதேசத்தில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் நடந்த மோதலில் 2 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தப்பிரதேசத்தில் இந்து முஸ்லிம்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல்களையடுத்து கடந்த 6 ஆம் திகதி முதல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் நீதவான் ஒருவரும் குழந்தையொன்றும் கொலையுண்டனர். 96 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திரிபுராவில் தடைசெய்யப்பட்ட தேசிய தொண்டர் இயக்கத்தினர் வேலை நிறுத்தமொன்றை மேற்கொண்டனர் இந்த ஆர்ப்பாட்டத்தின் போது 3 பேர் கொலையுண்டனர்.

திரிபுராவைத் தனிநாடாகப் பிரகடனம் செய்யும்படி கோரி தேசியதொண்டர் இயக்கத்தினர் ஆயுதம் தாங்கிப் போராடுகின்றனர்.


ஃபோம்

அதிசய சலவை தூள் உங்கள் துணிகளை வெண்மையாகவும் பளபளப்பாகவும் துவைக்கும்

நயமான விலையும் கூட




சாளமாக நுரைக்கும்
நன்றாகக் கரையும்
துணிகளின் அழுக்கை விரைவாக நீக்கும்
சிக்கனம் மிக்கது

தயாரிப்பாளர்:
சின்டெட கம்பனி பிரைவேட் லிமிட்டெட்
தொழில் நுட்பவல்லுனர்
தெய்கோகு ககோ கம்பனி லிமிட்டெ
ஒசாகா, யப்பான்
கிளை ஸ்தாபனம்
55, முதலாம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்

50 கிராம்ஸ் 1-90 | 225 கிராம்ஸ் 8-60
550 கிராம்ஸ் 19-80 | 1 கி. கிராம் 85-00



விவசாயிகளே!

BAYER

உங்கள் நெல் வயலில் உண்டாகும் கோழிச்சூடான், நெற்சப்பி. மொண்டி, குதிரைவால்புல், ஆடிப்புல், பன்கோரைவகை எல்லாக் களைகளையும் அழிக்க பாவியுங்கள்

“பாயர்” உற்பத்தியான

3. 4. டி. பி. ஏ. அடங்கிய “சேர்கோப்பூர்”

450 மி. லீ. — 57 ரூபா. 3.25 லீற்றர் — 375 ரூபா மாத்திரமே.

நெல் விதைத்து 7 — 21 நாட்களுக்கிடையில்

நெல் விதைத்து 21 நாட்களுக்கு பின்னர் உண்டாகும் சிறுகோரை, சந்தனக்கோரை, முள்ளி கிடைச்சி ஆகிய எல்லா அகன்ற இலைகளையும் அழிக்க பாவியுங்கள்

எம். சி. பி. ஏ. அடங்கிய பாயரின்

(1) “ஹெடோனல் எம். 60%”
450 மி. லீ. — 55 ரூபா. 2 லீற்றர் — 240 ரூபா.

(2) “ஹெடோனல் எம். 40%”
450 மி. லீ. — 33 ரூபா 50 சதம்.

(3) “ஹெடோனல் D. 55%”
250 மி லீ. — 55 ரூபா.

ஹெகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு – 10.

உங்கள் ஏக விநியோகஸ்தர்கள்:

யூனியன் ஏஜன்சீஸ், 50A, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
பாயர் அக்ரோ கெமிக்கல்ஸ். 4, அந்தோனிப்பிள்ளை கட்டடம், கிளிநொச்சி.
குளோப் ரேடர்ஸ், பசார் வீதி, வவனியா.
கே. அக்பார், மன்னர்.

### மணிவாக்கு

''மாந்தரின் வாழ்வில் தேவைப்படுவது
சாந்தம் தானென்ருர் — அது
மண்ணேயும் ஆளும் விண்ணேயும் ஆளும்
மகத்துவம் பாரென்ருர்.''

இயேசு காவியம்

## நமதுநோக்கு

# தீவிரவாதத்தின் தொடர்ச்சி

கடந்த வெள்ளிக்கிழமை இங்கிலாந்தின் 'நுவரெலியா' என்று சொல்லக்கூடிய பிரைட்டனில் நடந்த குண்டுவெடிப்பில் ஒரு எம். பி. உட்பட நான்கு பேர் இறந்ததும் 32 பேர் காயப்பட்டதும் இக்கால வரலாறு காணுத பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இதனே நடத்தி இதற்குப் பொறுப்புக்கோருபவர் ஐரிஷ் குடியாட்சி ராணுவத்தினர். ஆளுங்கட்சி மகாநாடு கூடியிருந்த போது, பிரதமர் தாட்சர் உட்பட அமைச்சரவையை முற்றிலும் முடித்துவிட ஐ. ஆர். ஏ. திட்டமிட்டதாக செய்திகள் கூறுகின்றன.

பன்னிரண்டு வருடங்களாக கெரில்லாத் தாக்குதலில் ஈடுபட்டுவரும் ஐ.ஆர். ஏ. பலரை பல பெரும் புள்ளிகளே - குறிப்பாகமவுண்ட் பாட்டன் பிரபுவை கொன்றதை எவருமறிவர்.

சுமார் இரு வருடங்கள் சோர்வடைந்திருந்த இந்த தீவிரவாத இயக்ம் இன்று விழித்திருக்கிறது காரணங்கள பலவாயிருக்கலாம்.

1981-ல் பத்து உண்ணுவிரதக் கைதிகள், அரசியல் கைதிகள் என்ற அந்தஸ்துக்கு வாதாடி பிரதமர் தாட்சரை அசைக்க முடியாத நிலேயில் உயிரிழந்தனர்.

இதனேப்பழிவாங்க இன்று உயிர்த் துடிப்போடு இயங்க உறுதி கொண்டிருக்கலாம்.

என்றும் எதற்கும் அஞ்சாத பிரதமர் என்ற பெயர் பெற்றிருக்கும் திருமதிதாட்சர் மயிரிழையில் உயிர் தப்பினுர். சற்றும் கலக்கமற்று தமது கடமைகளேத் துணிவுடன் தொடர்கிருரென்று சொல்லப்படுவது உண்மையாகலாம்.

தெய்வாதீனமாக உயிர் தப்பியிருப்பது வெறும் அதிர்ஷடம் என்று கொள்ள இயலது. பிரிட்டனின் பெருமை காக்க தெய்வம் உடன் பாடாயிருந்ததென்று கொள்ள யார் தயங்குவார்?

அசையாத தாட்சரை அசைத்து விடுவோமென்று பந்தயம் பிடிக்கும் ஐ. ஆர். ஏ.யன் வாதம் என்ன?

அதனேஆராய்ந்து எங்கள் நாட்டின் 'இயககத்துடன்' ஒற்றுமை காண்பது மூடச் செயல்களில் முதலிடம் பெறும் முயற்சி.

எமக்குத் தேவையான பொருத்தமான படிப்பினே கெரில்லா யுத்தம் பற்றியதே. ஆங்கில ஜனநாயக்மே இதுபற்றி ஆழ்ந்து ஆலோசிக்கவேண்டி இருக்கிறது.

உலகில் பல இடங்களில் இத்தகைய கிளர்ச்சி உருவெடுத்திருக்கிறது. வெற்றியில் முடிகிறது. சிலசமயம் அழிந்து ஒழிகிறது; அல்லது அழிக்கப்பட்டு ஒழிக்கப்படுகிறது.

மனிதரின் நோய்போல சிலவகையில் ஒற்றுமையிருந்தாலும் ஒவ்வொன்றும் தனித்துவமானது. எனவே 'ஐ. ஆர். ஏ. வீடு தேடிக் குண்டு போட்டிருக்கிறது. இதுபோல் இங்கும் நடக்கும்' என்று அறுதியிட்டுக் கூறுவது ஏற்றுக்கொள்ளும் வாதமல்ல.

கொழும்பு கட்டிடங்களில் குண்டு வெடித்ததும், அண்மையில் நகரை அழிக்க வல்ல ஒரு தீவிபத்து தவிர்க்கப்பட்டதும் இந்த நாட்டில் இடம்பெறும் கெரில்லா இயக்கத்துடன் தொடர்பு உடையதென்று சொல்லப் பட்டிருக்கிறது; இது உண்மையானுல் இதற்குரிய பாதுகாப்பு அவசியமென்பதை உணர்த்துகிறது.

குண்டிலும் பயங்கரத் தாக்குதலிலும் தேர்ச்சி பெற்ற கெரில்லா இயக்கம் எதனேயும் அழிக்கும் சக்தியால சாதித்துவிடலாம் என்று நினேப்பது தவறு.

அதேபோல் கெரில்லா இயக்கத்துக்கு இடமளித்த ஆட்சியின் அநீதிகள் தொடருமா"பின் இவ்வித இயக்கத்தை ஒழிப்பது அசாத்தியம். ஐ. ஆர். ஏ. இதற்கு நல்ல உதாரணம்

மக்களின் அபிலாஷைகளேப் பிரதிபலிக்கும் கெரில்லாயுத்தம், அவர்களின் ஆதரவைப் பேணுமாயின் ராணுவத் திறமையால் அதனே அடக்க முயல்வது சந்தேகமான வழி. அது ஓரளவிற்கு உதவினுலும் மக்களின் ஆதரவைத் திசை திருப்பாத நிலேயில் குண்டுப் புரட்சி என்ருெரு புதிய பாதை திறபடலாம்.

# தமிழக முதல்வர் குணமடைய வேண்டும்

தமிழக முதல்வர் திரு. எம் ஜி. ராமச்சந்திரனின் சுகவீனம் பற்றி நாம் செய்தியைக் கவனித்துப் படித்துவருகிறோம்.

குணமடைகின்ருரென்று மகிழ்ச்சியடைந்த கோடிக் காணக்கான மக்கள் இன்றைய செய்தியில், அவருக்கு வெளிநாட்டு விசேட சிகிச்சை தேவைப்படலாமென்பதையிட்டு நிச்சயம் சோர்வடைவார்கள்.

எம். ஜி. ஆரின் உடல் நிலே முன்னேற்றம் குறித்து அவ்வப்போது ஆவலுடன் அறிந்துவரும் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அவருக்கு வேண்டிய எந்த உதவிக்கும் தயாராக இருப்பது முதலமைச்சரின் அபிமான உலகத்துக்கு ஆறுதல் அளிக்கிறது.

இந்தியப்பிரதமருக்கு எம். ஜி. ஆர். ஒரு சிறந்த மாநிலத்தின் ஆட்சித்தலேவர். தமிழகமக்களுக்கோ அவர் ஒரு முடிசூடாமன்னர். இதற்குமேலாக உலகெங்கிலும் வழும் மக்கள் தங்கள் உள்ளத்தை அவருடைய நடிப்புத் திறத்துக்கு பறிகொடுத்தவரென்ருல் அவருக்காக பிரார்த்திப்போர் எத்தனே கோடி மக்கள்.

இலங்கையில் பிறந்து இந்தநாட்டை நேசிப்பவர் என்பதுமட்டுமல்ல, இங்கு வாழும் தமிழ் மக்களின் கதியை உணர்ந்து கை கொடுக்கவல்ல ஐந்துகோடி மக்களின் உதவிக்கரம் அவர். தங்கள் உயிரைத் தப்பவைக்க வேண்டுமென்று இங்கிருந்து ஓடிப்போன பல்லாயிரக்கணக்கான மக்களின் புகலிடம் அவரென்ருல் எமது முதற்பணி இறைவனே இறைஞ்சுவதே.

### 'பொலித்தீன்' பைகளில் உணவுப் பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் மீண்டும் பொலித்தீன் பைக்கட்டுகள் மூலம், உணவுப்பொருட்களே விநியோகிக்க முடிவுசெய்துள்ளது.

நிறைகுறைவில்லாமல் நியாயவிலேயில் உணவுப்பொருட்களேப் பாவனேயாளர்கள் பெற வேண்டும் என்பதற்காகவே இந்தநடவடிக்கை எடுத்துள்ளதாக மேற்படிசங்கத்தலேவர் திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் தெரிவித்தார்.

### இன்று கண்ணதாசன் நினேவுதினம்

# "யேசு காவியம்" படைத்த "அர்த்தமுள்ள இந்து" மகன்

இந்த நூற்ருண்டில் பாரதிதாசனுக்குப் பின் தமிழ்க் கவிதையுலகிற் தனியிடம் பெற்று மிளிர்ந்தவர் கவிஞர் கண்ணதாசன் அவர் ஒரு வரகவி. அவர்நாவிற் கலேமகள் எப்பொழுதும் நர்த்தனமாடினுள். பாட்டுக்குப் பல புலவர் 'பா'வுக்குக் கோடி நல்லூர் தோன்றிமறைந்த தமிழ் மொழியின் விளே நிலத்திலே மொழியோட்டம் பொருளோட்டங்காட்டிப் புகழ்படைத்த மக்கள் கவிஞர் கண்ணதாசன் கண்ணதாசனுடைய அனுபவச் செழுமைமிக்க ஆக்கங்கள் அவரது எதிரிகள் கூட அவரின் அபிமானிகளாக மாறச்காரணமாயிற்று. கவிஞரின் கவிதைகள் காலத்தால் அழியாதவையாகப் பலமுறை படித்தாலும் சலிப்பேற்படாதவையாக அமைந்து விளங்குகின்றன.

1927ம் ஆண்டு யூன் மாதம் 24ந் திகதி பாண்டி நாட்டின் சிறுகூடற்பட்டி என்னும் கிராமத்திற் பிறநத முத்தையா கண்ணனின் தாசனுகி கண்ணதாசன் என்ற பெயரில் இலக்

செ. சக்திதரன்

கியவுலகிற் புரிந்தவை ஏராளம். பார்வதிநாதன், வணங்காமுடி அளசா, காரைமுத்துப் புலவர், கமகப்பிரியா எனப் பல புனேப்பெயர்களில் எழுதி வந்த கவிஞர் தனது திறமையினுல் தமிழக ஆஸ்தான கவிஞுக உயர்ந்து நின்ருர்.

'கண்ணன் கோவில் பறவை இது…'' எனத்தான் கண்ணதாசன் என்பதை உறுதிப்படுத்திய கவிஞர் கவிதையோடு மட்டும் நின்று விடாது நாவல் நாடகம், சிறுகதை, கட்டுரை எனப் பலதுறைகளிலும் தனது திறமையைக் காட்டினுர். கவிஞரின் பாடல்கள் அழகுணர்வு மிக்கவை, அர்த்தம் நிறைந்தவை.

''பாவி என்னே மறுபடியும் பிறக்கவைக்காதே'' என்ற பாடலடியில் தத்துவச் சீர்மை பொருந்திய தன்மையான உடன்பாட்டு உத்தியைக்காணலாம். 'நடைமுறை வாழ்விற் தவறு செய்த ஒருவன் பாடலேக்கேட்ட மாத்திரத்திலேயே தன்னேயே அப்பாத்திரமாகக் கொள்ளுவது நிதர்சனமான உண்மை. கவிஞரின் பாடல்களில் உத்திகளே மட்டுமன்றி ஒன்பான் சுவைகளேயுமுணர முடியும். இதுவே மனித உணர்வுகளே இலாவகமாகக் கவிதைகளிற் கையாண்ட பாரதிக்கு பின் கண்ணதாசன் மக்கள் மத்தியிற் பிரபல்யம் பெறுவதற்குக் காரணமாயிற்று.

கவிஞருடைய கற்பனேத் தோட்டத்தில் மலர்ந்த மலர்கள் இலகு வருணனேயுடையவை குறிப்பாக உணர்ச்சிப் பொருள் வருணனேயில் கண்ணதாசனே 'பனித்துளி ஒன்று சிற்பியில் விழுந்து வந்தத முத்து அது மன்னவன் சொத்து' தத்துவக் கருத்துக்கள் ஆழமானவை. நிலேயாமை என்ற தத்துவக்குறிக்கோள் கவிஞரின் கவிதைகளிற் சிறப்பாகத் தொனித்துள்ளது.

…விட்டுவிடும் ஆவி
பட்டுவிடும் மேனி
சுட்டு விடும் நெருப்பு
சூனியத்தின் நிலேப்பு.

கவிஞர் பழம் பெரும் கருத்துக்களுக்குப் புதுவடிவங் கொடுத்து மக்கள் மத்தியிற்

(5ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### எம். ஜி. ஆர். குணமடைய பிரார்த்திப்போம்

தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் சுகவீனமுற்று வைத்தியசாலேயில் சிகிச்சை பெற்றுவருவது யாவரும்அறிந்ததே.

அண்மையில் யான் சென்னேயில் ஐந்து வாரங்கள் தங்கிய போது அவர்கள் ஆட்சியில் தமிழ்நாடு அடைந்துள்ள பிரமிக்கத்தக்க முன்னேற்றத்தை நேரில் காணக்கூடியதாக இருந்தது. விவசாயத்தில், கல்வித் துறையில், தொழிற்துறையில் நகர நிர்மாணத்தில், ஏழைகளின் வாழ்க்கை மேம்பாட்டில் நல்வளர்ச்சி அடைந்துள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கைத் தமிழர்

[5ம் பக்கம் பார்க்க]

## கவியரசர் கண்ணதாசன்!

கவியரசே!
கண்ணதாசா! — தமிழ்ப்
புவியரசுப் பாவலனுய்ப்
பொலித்த தமிழ்த் தென்றலே!
நாத்திகனுய் இருந்து பின்
ஆத்திகனுய் மாறி அருஞ்
சாத்திரங்கள் தத்துவங்கள்
எழிலாக — எளிதாக
இன்தமிழில் தந்தவனே!
கற்ருேரும் மற்ருேரும்
கருத்துணர்ந்து ரசிப்பதற்கே
காதல் முதற் பல் சுவையும்
காதில் ஒலித்திடவே வைத்தவனே!
பாரதிக்கும் அவன்தாசனுக்கும் பின்
அரசு செய்த பாவலனே!
கருத்தாலும் கவிவளத்தாலும்
கவியுலகில் —
பெரும் இடம் பிடித்த நாயகனே!
தமிழ் —
அன்னேக்கு அணி செய்தாய்
ஆயிரமாம் கவிமலரால்
அவள் வாழ்வு வளர்வதுபோல்
உன் நினேவும் வளருமய்யா!

— நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

○ ○ ○ ○

## தொழுதிடோர் சிலேயை வைப்போம்

மன்னர் வளர்த்த தமிழ்
மாண்பு செய்ய வந்துதித்தோன்
கன்னல் தமிழ்க் கவியரசன
களம்பல கண்ட காளே
தன்னேயேத் தமிழுக்கீந்த
தன்னலம் கருதாத் தொண்டன்
தன்மானத் தமிழர் வேங்கை
தன்னிகரில்லா வேந்தன்

இந்துமத அர்த்தமெலாம்
இனிதாய்ச் சொல்லி
சிந்தை கவர் யேசுபிரான் காவியத்தை
சீராகப் பாடிமிகச் சிறப்படைந்தோன்
சுந்தரத் தமிழ்க் கவிபடுதற்கும்
சுவைபடவே கதைகள் பல செய்வற்கும்
செந்தமிழன் கண்ணதாசனுக்கு நிகராக
செகத்தினிலே இனியாரும் பிறக்கவேண்டும்.

— கே. பி. நடனசிகாமணி

# அபிவிருந்திப் பணியில் விசேட சேவை அலுவலர்பங்கு

(அ.கதிர்காமநாதன்)

''பன்முகப்படுத்தப்பட்ட நிர்வாகம் மக்களுக்கு கிடைப்பது உங்களுடைய கையில்தான் தங்கியுள்ளது கிராம மக்களுக்கு கிடைக்கக் கூடிய சேவைகளை வலுப்படுத்துகின்ற முறையில்உங்களுடைய சேவைகள் அமைந்துள்ளது. அரசாங்கத்தின் கட்டுபாட்டுக்கள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதை அறிவதற்கு கிராம சேவை அலுவலகங்களை அரசாங்கம் நியமித்துள்ளது.ஆனல் மக்களுக்கு உள்ள தேவைகளையும் அபிவிருத்தி வேலைகளையும் கவனிப்பதற்கு உங்களை நியமனம் செய்துள்ளது உங்களுடைய கடமைகள் மக்களுக்கு பூரணமாக கிடைப்பதற்கு சில பயிற்சிகள் அவசியமானது. அந்த பயிற்சிகளை நீங்கள் பெறுவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் உங்களுடைய தொழிற்சங்கம் பயிற்சிகளை பெறுவதற்கு அரசாங்க அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள வேண்டும் பயிற்சிகளை நீங்கள் பெற்றுல் மக்களுக்கு பூரணமான சேவைகளைஆற்ற வேண்டும்.''

இவ்வாறு வவனியா மாவட்ட அரசாங்க அதிபர் திரு கே.சி. லோகேஸ்வரன் வவனியா கூட்டுறவுக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் பேசும் விசேட சேவை அலுவலர் கழகத்தின் பேராளர் மாநாட்டில் குறிப்பிட்டார்.

வவனியா மாவட்ட தலைவர் திரு.ரி.சர்வானந்தம் தலைமையில் நடை பெற்ற இம்மாநாட்டை வவனியா மாவட்ட அரசாங்க அதிபர் திரு'கே.சி. லோகேஸ்வரன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்வைத்தார்.

இம் மாநாட்டிற்கு மட்டக்களப்பு, மன்னுர், முல்லைத்தீவு கிளிநொச்சி யாழ்ப்பாணம் வவனியா ஆகிய மாவட்டங்களில் இருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள ஆயுதப்படையினரை பொது மக்ககளின் அன்ருட வாழ்க்கை மாமுல் நிலையில் நடைபெறுவதற்கும் பாடசாலை மாணவர்கள் அச்சமின்றி பாடசாலைகளுக்குச் செல்லவும் வெளியேற்ற வேண்டுமென்றும் தமிஇ மாவட்டங்களில் தொடர்ந்து தமிழ் பேசும் விசேட அலுவலர்கள் கடமையாற்றுவதனுல் சிங்களத்தேர்ச்சியில் இருந்து விதிவிலக்களிக்கப்படவேண்டும் என்ற இரண்டு தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

வவனியா மாவட்ட உதவி திட்டமிடல் பணிப்பாளர் திரு. ஆ. செந்தில்வடிவேல் உரையாற்றிஞர். ''கிராம சேவை அலுவலர்களுக்கும் உங்களுக்கும் இடையே யார் பெரியவர்கள் என்ற எண்ணம் தோன்றியுள்ளது. உண்மையிலே நீங்கள் தான் பெரியவர்கள்'' என்ருர்.

உதவி அரசாங்க அதிபர் ஆ. குணநாயகம், ஏ.கிஸ்ண பிள்ளை திட்டமிடல் உத்தியோகத்தர் எஸ். துரைசிங்கம் ஆகியோரும் சிறப்புரையாற்றிஞர்கள்.

யாழ்.மாவட்டத் தலைவர் திரு.வி.எஸ்.துரைராசா கிளிநொச்சி மாவட்டத் தலைவர் க. பத்மநாதன் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் திரு. சுகனகசூரியம் முல்லைத்தீவு மாவட்டத்தலைவர் திரு,எஸ். திருநாவுக்கரசு மன்ஞர்மாவட்டத் தலைவர் ஜனுப் எச்.அபுல் குதா ஆகியோர் அந்தந்த மாவட்டங்களில்விசேடசேவை அலுவலர்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளை விரிவாக எடுத்துக் கூறினர்கள்.

# மூதூர் எம்.பி.க்கு அவதூறும்!

## பிரசுரம் வெளியிட்டவர் பிணையில்

(திருக்கோணமலை)

மூதூர் எம்.பியும் மன்னுர் மாவட்ட அமைச்சருமான ஜனுப் எம். இ. எச். மஹ்ரூபை அவதூறு செய்யும் வகையில் 'சூருவளி' என்ற தலைப்பில் பிரசுரம் வெளியிட்டது என்ற முறைப்பாட்டின் பேரில் திருமலைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு விளச்கமறியலில் வைக்கப்பட்டிருந்த திருக்கோணமலை நகரசபை அதிகாரி ஒருவரை திருக்கோணமலை பதில் நீதவான் திரு, எம்.கே. செல்வராசா 5000 ரூபா ரொக்கப் பிணையில் விடுவித்தார்.

மூதூர் எம, பீ. ஜனுப் மஹ்ரூப், வாய்மூலம் கொடுத்த முறைப்பாட்டைத் தொடர்ந்தே திருக்கோணமலைப் பொலீஸார் சந்தேகநபரான ஜனுப் எம். ஐ. நஜீப் என்பவரைக் கைது செய்தனர். திருக்கோணமலை நகரசபையில் உதவி களஞ்சியப் பொறுப்பாளராக இவர் பணியாற்றுகின்ருர்.

நகரசபையில் இருந்த இரண்டு டைப்ரைட்டர்களையும் பொலீஸார் கைப்பற்றினர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர்,

## திருமலை பிரிமா ஆலையில்

# திறமையான ஊழியர்களுக்கு ஜப்பானில் விடுமுறை!

(திருக்கோணமலை)

திறமையாகப் பணிபுரியும் ஊழியர்கள் ஜப்பானில் விடுமுறையைக் கழிக்கும் திட்டம் ஒன்றை பிரிமா மாஆலை நிர்வாகம் ஆண்டுதோறும் செயற்படுத்தி வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் இம்முறை மா ஆலையில் சுப்பரின்டனுக பணிபுரியும் திரு. துரையப்பா செல்வசுந்தரராஜாவை ஜப்பானில் இரண்டு வாரகால விடுமுறையைக் கழிக்க பிரிமா மா ஆலை நிர்வாகம் அனுப்பிவைத்துள்ளது.

திரு, செல்வசுந்தரராஜா ஜப்பான் போய் திரும்பும் செலவு உட்பட ஜப்பானில் தங்கி நிற்கும் பொழுது ஏற்படும் சகல செலவுகளையும் பிரிமா மா ஆலை நிர்வாகமே ஏற்றுள்ளது.

## திருகோணமலை

# உணவுச்சாலைகள் மீது திடீர் சோதனை

(திருகோணமலை)

திருமலை நகர எல்லைக்குள் சுகாதாரமற்ற முறையில் நிர்வகிக்கப்படும் உணவுச்சாலைகள் மீது அண்மையில் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். ஞானகுணாளன் தலைமையிலான குழுஒன்றே இச்சோதனைகளை நடத்தியது.

உணவு, மருந்துப் பரிசோதகர் திரு ஏ.கோமஸ், சுகாதார மேற்பார்வையாளர் திரு ஏ.செல்லையாஆகியோர்கள்இக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட உணவுச்சாலைகளில்மூடாமல் திறந்தபடி காணப்பட்ட உணவுப்பண்டங்களை இக்குழுவினர் அப்புறப்படுத்தி அழித்தனர். ஒரு மாதகாலத்தினுள் சுகாதார முறையில் சகல ஹோட்டல்களும் சீர்திருத்தம் செய்யப்படும் என்ற உறுதிமொழிக் கடிதங்களை உரிமையாளர்களிடம் இருந்து இக் குழுவினர் பெற்றனர்.

சுகாதாரச் சட்டவிதிகளுக்கு அமையாது நடக்கும் ஹோட்டல்கள்மீது சட்டநடவடிக்கை எடுக்கவும். மாவட்டச் சுகாதார வைத்திய அதிகாரி தீர்மானித்துள்ளார்.

## மார்க்பெட் நிறுவ...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அருகில் இறக்கிவிட்டு விட்டு ஜீப்பைக் கடத்திச் சென்றதாகக் கூறப்பட்டது.

### அனுதரவான நிலையில் கண்டுபிடிப்பு

இந்த ஜீப்வண்டி பின்னர் அனுதரவான நிலையில் மானிப்பாய் ப.நோ.கூ. சங்கத்திற்கு அருகாமையில் கண்டுபிடிக்கப்பட்டது.

## எம். ஜி. ஆர்...

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

களின் துயர்துடைப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிருர்.தமிழ் மக்களின் மீது இலங்கையில் கட்டவிழ்த்து விடப்பட்ட மிருகத்தனமான வன்செயல்களில் உயிர்தப்பி தஞ்சமென தமிழ்நாடு சென்ற இலங்கைத் தமிழர்களை, அஞ்சலென அபயமளித்துக் காத்து வருகின்ருர்.

இலங்கையில் கல்விகற்கமுடியாது தமிழ்நாடு சென்ற பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை தமிழ்நாட்டிலுள்ள கல்வி நிலையங்களில் எல்லோரையும் சேர்க்கவேண்டும் என்று அரசகட்டளை பிறப்பித்ததை அவர் காரியதரிசி திரு பரமசிவம் அவர்களிடம் கேட்டு மிக மகிழ்ச்சியடைந்தேன். அது இன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது, இவ்விதமான தலைசிறந்த தமிழ்ப் பாதுகாவலன் சுகயீனமுற்றிருப்பது எமக்கெல்லாம் கவலையளிக்கிறது. அவர் கூடிய விரைவில் பூரண சுகமடைய வேண்டுமென தமிழ்மக்கள் யாவரும் இல்லங்களிலும், ஆலயங்களிலும் இடைவிடாது பிரார்த்தனை செய்யவேண்டுமென்று தமிழ் மக்கள் யாவரையும் பணிவுடன் வேண்டுகிறேன்.

**சதா. ஸ்ரீநிவாசன்**

உடுவில்

# மாவட்ட முகாமையாளர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு தேசிய வீடமைப்பு இலாகாவில் இடம் பெற்ற கொள்ளைச்சம்பவம் தொடர்பாக விசேட பொலிசாரால் விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்ட மாவட்ட முகாமையாளர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி வீடமைப்பு இலாகா காரியாலயம் மாங்குளத்தில் இருக்கிறது.

இக்காரியாலயத்தில் துப்பாக்கிமுனையில் ரேனியோ, தட்டச்சு இயந்திரங்கள், வானெலி ஆகியனகொள்ளை அடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக முகாமையாளரும், பிரதமலிகிதரும் விசேஷ பொலிசாரால் விசாரணைக்காகக்கொண்டு செல்லப்பட்டனர்.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன் எடுத்த நடவடிக்கையின் பேரில், குறிப்பிட்ட இருவரும் விடுதலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(மா)

## இராணுவம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டது.

இராணுவத்தினரால் சந்தேகத்தின்பேரில் தேடப்பட்டு வரும் சோமரஞ்சன் என்பவரின் தந்தை சோமசுந்தரம் (ஓய்வுபெற்ற இராணுவ உத்தியோகத்தர்) என்பவரும், கடந்த 10ம் திகதி மயிலிட்டியில் இடம்பெற்ற சம்பவத்தின் போது மரணமான ஜெயப்பிரகாஷின் தந்தையான சோமசுந்தரம் என்பவரும், மற்றும் நான்கு இளைஞர்களும் விசாரணைக்காக இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட வீடுகளில் இருந்த பெண்களும் ஸ்தல விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வ. பி. போக்குவரத்துச் சபை பஸ், ஒரு மினிபஸ், 4 கவச வண்டிகளில் வந்த இராணுவத்தினரே சோதனை நடாத்தினர்.

யாழ். தொலைபேசிப்பரிவர்தனை நிலையப்பரிசோதகர் ஒருவரின்வீடும் சோதனையிடப்பட்டபொழுது அங்கு மேசை மீதுவைக்கப்பட்டிருந்த உறை ஒன்றிலிருந்து ரொக்கப்பணம் காணுமல் போய்விட்டதாக, இராணுவப் பொறுப்பதிகாரியிடம் புகார் செய்யப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

(மா)

## படகு விபத்து: 100 பேர் பலி!

[டாக்கா]

பங்களாதேஷில் நேற்று இடம்பெற்ற படகு விபத்தொன்றில் சுமார் 100 பேர் பலியாகியுள்ளனர்! 30 பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன.

## இன்று...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பரப்புவதில் முன்னணியில் நின்ருர். 'பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா?' கருத்துப் பழமையானதாயினும் வடிவிற் புதுமையிருக்கிறது, 'சிங்காரப் புன்னகையைக் கண்ணுலே கண்டாலே சங்கீத வீணையும் ஏதுக்கம்மா...' என்ற கவிஞரின் பாடலடிகள்.

'குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்' என்ற வள்ளுவரின் குறளை ஞாபகமூட்டுகின்றது.

சுயமரியாதை இயக்கம், தி மு க, இந்திரா காங்கிரஸ், தமிழ் தேசிய கட்சி, அ. தி. மு. க, எனப் பல கட்சிகளுக்கும் தாவிய கவிஞர் மனிதர்களை நன்ருகப் புரிந்து கொண்டவர்.

'சிரிப்புப் பாதி அழுகைபாதி
சேர்ந்த தல்லவோ மனித ஜாதி
நெருப்பும் பாதி நீரும் பாதி
நிறைந்த தல்லவோ மனித நீதி'

என மனித நீதியினை மதிப்பிடுகின்ருர்.

கவிஞரின் அர்த்தமுள்ள இந்துமதம் இந்துமக்களுக்கு ஒரு வரப்பிரசாதம். இந்நூல் கவிஞரின் உரைநடைச் சிறப்புக்குத் தக்க உதாரணமாகின்றது. இதேபோற் கவிஞரின் மறைவின்பின் நூலுருப்பெற்ற 'யேசுகாவியம்' கிறிஸ்தவ மக்கள் மத்தியிற்பிரபல்யம்பெற்றதொன்று. பிற்காலத்தில் கண்ணதாசன்பாடிய கிருஷ்ணகானங்கள் பக்திச்சுவை மிக்கவை.

இவ்வகையாக மக்கள் மத்தியில் நிலையான இடம்பிடித்து விட்ட கண்ணதாசனின் பாடல்கள் என்றும் அழியாதவை. கவிஞர் கண்ணதாசனின் உடல் அழிந்துவிட்ட போதிலும் அவரின் நினைவுகளும் ஆக்கங்களும் தமிழ்மக்கள் மத்தியில் இன்னமும் வாழ்ந்துகொண்டேயிருக்கின்றன.

## நீர்த்தேக்க...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகபூர்வ அனுமதி பெற்றுக்கொள்ளாமல் மாதுறுஓயா நீர்த்தேக்கப்பகுதியில் நுழைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நீர்த்திட்டம், கடந்த திங்கட்கிழமை காலை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது தெரிந்ததே.

## மற்ருெரு டாக்டரும் விசாரணை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அரசினர் ஆஸ்பத்திரியில் மற்றுமொரு டாக்டரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பயங்கர வாதத்தடுப்புச்சட்டத்தின் கீழ் பொலிஸாரினுல் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

பிரேமச்சந்திரன் என்ற டாக்டரே விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார்.

இதற்கு முன்னர் ஒரு டாக்டர் ஒரு ங்காணி, தாதி ஆகிய மூவரும் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டது தெரிந்ததே.

## எம். ஜி. ஆர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இரா. நெடுஞ்செழியனுக்கு இந்தத் தந்தியை அவர் அனுப்பியுள்ளார்.

''தமிழக முதலமைச்சர் விரைவில் குணமடைய யாழ். மாநகரசபை மக்கள் சார்பில் பிரார்த்திக்கிறேன்'' என்று அந்தத் தந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

## கிளிநொச்சி நீதிமன்றில் நடந்த கொள்ளை!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் கொள்ளைச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

நீதிமன்ற விசாரணைகள் முடிவடைந்து நீதிமன்றக்காரியாலயத்தில் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஒருவர் திடீரென உட்புகுந்து நீதிமன்ற காசாளரிடமிருந்து பணத்தைப் பறிக்க முற்பட்ட போது அவரைக் கைதுசெய்ய பொலிசார் முயன்றனர்.

இதனையடுத்து பொலிசாருக்கும் கொள்ளையருக்குமிடையே சிறிதுநேரம் இழுபறி ஏற்பட்

(7-ம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோதமின்பாவனை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சட்ட விரோதமான முறையில் மின்சாரம் பாவித்த 9 கடை உரிமையாளர்களுக்கு 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மின்பாவனையாளர்கள் குறித்து யாழ், மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே, சிவஞானம் எச்சரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளார்.

## வவனியாவிலுள்ள ஆயுதப்படைத் தலைமை நிலையம் இடம் மாறும்?

(வவனியா)

வவனியா நகரசபை கட்டிடத்திலுள்ள ஆயுதப் படை தலைமை அலுவலகம் இடம் மாறவுள்ளது.

மிகவிரைவில் குறித்த அலுவலகம் தச்சன்குளத்திலுள்ள விமானத் தளத்திற்கு அருகில்அமைக்கப்பட்டுள்ளகட்டடத்திற்குமாறவுள்ளது என தெரியவருகின்றது.

1983 செப்டம்பரில் நகர சபைக் கட்டிடம்ஆயுதப்படையினருடைய பாவனைக்காகச் சுவீகரிக்கப்பட்டது தெரிந்ததே.


# உங்களிடம் ரூ. 25,000/- இருந்தால் என்ன செய்வீர்கள்?

உங்கள் மகன் நீண்ட நாட்களாக ஆசைப்பட்டுக் கொண்டிருக்கும் மோட்டோர் சைக்கிளை வாங்கிக் கொடுப்பீர்களா...

பணத்தைச் செலவழிக்காமல் வீட்டில் அலுமாரிக்குள் பூட்டி வைத்துப் பாதுகாப்பீர்களா..

அற்புதமான வீடியோ டெக் ஒன்றை அல்லது வீடியோ சாதனத்தை வாங்குவீர்களா...

அல்லது நம்பிக்கையோடு மகாராஜா நிறுவனத்தில் முதலீடு செய்து உங்கள் பணத்தைப் பெருக்குவீர்களா?

நீங்கள் புத்திசாலியானால் கடைசியாகக் குறிப்பிடப்பட்டதே உங்கள் தெரிவாக இருக்கும்; ஏனைய மூன்று ஆசைகளும் இயல்பாகவே நிறைவேறும்.

ஆரம்ப முதலீட்டுக்குக் கிடைக்கும் 30% வட்டியைக் கொண்டே நீங்கள் விரும்பும் ஆடம்பரப் பொருள்களை ஒவ்வொன்றாக வாங்கலாம். முதல் அப்படியே இருக்க உங்கள் பணம் தினமும் பெருகிக் கொண்டிருக்கும்.

**பிரதான வியாபாரத் துறைகள்**

நிலையான வைப்புச் சேகரித்தல், குத்தகை, கைத்தொழில் போன்ற வேறு துறைகளுக்கான இயந்திர, மூலப்பொருள் இறக்குமதிக் கடன்வசதி, பெயர் பெற்ற தரமான பொருட்கள் இறக்குமதி, ஈடு, அடமானக்கடன் வர்த்தக வாகனங்களுக்குக் கடன் வழங்கல், காப்புறுதி முகவர்.

**சுருக்கப் பேறுகள்**

| | 1980/81 ரூபா | 1981/82 ரூபா | 1982/83 ரூபா |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் | 750.000 | 1.585.900 | 2.585.900 |
| ஒதுக்கம் | 2,835.255 | 11.175.062 | 13.701.040 |
| மொத்தப் பங்குதாரர் நிதி | 3.585,255 | 12.760.962 | 16.286,940 |
| வைப்புகள் ** | 66.938,481 | 78.102.511 | 113.732.001 |
| வங்கி இருப்பு | 8,973.105 | 12.812.856 | 16.291.978 |
| பொறுப்புகள் | 5.139.382 | 1.513.556 | 7.344.829 |
| வைப்பாளர்களுக்கு வட்டி வழங்குமுன் இலாபம் | 13,779,850 | 18.691.833 | 25.343.400 |
| வரியிறுக்குமுன் இலாபம் | 1.946.188 | 2.454.490 | 3,634,085 |
| வரியிறுத்தபின் இலாபம் | 1.629,687 | 1,084.490 | 2.689.015 |
| பங்கிலாபம் | 187,500 | | |

** 1983 டிசம்பர் 31ம் திகதி வரை வைப்புக்கள் 14.5 கோடி ரூபாய்களுக்கு மேல

**பணிப்பாளர் சபை**

திரு. ஆர். மகாராஜா, முகாமைப் பணிப்பாளர்.
திரு. ஆர். இராஜ மகேந்திரன், முகாமைப் பணிப்பாளர்.
திரு. வி. என். குமாரசுவாமி, FCA (ENG & WALES), ATII (ENG.) MINST A M. (ENG.) AMBIM (ENG.) FCA (CEY.)
திரு. பி மகிந்தா B Sc. (Hons.) FBIM (ENG.)
திரு டபிள்யூ. பஸ்நாயக்க, MBIM (ENG.) நிர்வாகப் பணிப்பாளர்.
திரு. சி. சிறீ நம்முனி, MBIM (ENG.) ACMA

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

**மகாராஜா இன்வெஸ்ட்மென்ஸ் லிமிட்டெட்**

உங்கள் பணத்தைப் பயன்படுத்த சிறந்த வழி வேறில்லை.

கூட்டிணைப்பு: 23-9-1976
தொழில் முகவரி: 347, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. தொலைபேசி: 34133/ 23130 / 29747
பதிவு அலுவலகம்: இலங்கைச் செயலக சேவைகள் நிறுவனம் 64, கெய்சர் வீதி, கொழும்பு-11,
கிளை அலுவலகங்கள், 122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 021—24267
78, கிங்ஸ் வீதி, கண்டி.தொலைபேசி 08-25670

உங்களுக்கு இப்போது நாம் கண்டி நகரில் சேவை செய்கிறோம். எங்களை 78, கிங்ஸ் வீதி, கண்டி என்ற முகவரியில் வந்து சந்தியுங்கள். தொலைபேசி: 08-24119.

Grant K&E 5573

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
சிவாஜி - தேவிகா
**நீலவானம்**
தீபாவளி வெளியீடாக
கே.பாலசச்சந்தரின்
**பூவிலங்கு**

இன்று மட்டும்
**வின்ஸர்** [யாழ்.]
10-30, 2-30, 6-15
ஜெய்சங்கர் - சாவித்திரி
**ஜக்கம்மா**
(புதிய பிரதி)

17, 18-10-84
**ராஜா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-00 4-30
6-45
VOSALINO AND
COMPANY
(Color-Comedy Film)

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30, 4-45
THE MOUNTAIN
MEN
Columbia Pictures
Release

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30,2-00
எம். ஜி. ஆர்- சரோஜாதேவி
எம். ஆர் ராதா
**தாயைக் காத்த
தனயன்**
(புதிய பிரதி)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30,2-30,
சிவாஜி - ஜெயலலிதா
**பட்டிக்காடா
பட்டணமா**

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
சிவாஜி, லட்சுமி
**தங்கைக்காக**
18 முதல்
10-15, 12-30, 2-15,
4-15, 6-00
Bruce lee
DRAGON STRIKES
AGAIN
(Colour)

முதல்தர 'திகில்' படம்
**றீகல்** [யாழ் நகர்]
சில தினங்கள் மட்டும்)
10-30,2-15, 4-30,6-30
VISITING HOURS
விறுவிறுப்புடன் கூடிய திகிலூட்டி திடுக்கிட வைக்கும் இப்படத்தை இருதயம் பலவீனமானவர்கள் பார்ப்பதை தவிர்க்கவும்.
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

**லிடோ** சினிமா
15 முதல் 17 வரை
10-30, 2-30, 6-30
**அந்தரங்கம்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 4-30
THE HOWLING
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

## மோட்டார் சைக்கிள்கள் கடத்தல்

(மட்டக்களப்பு)

இரு மோட்டார் சைக்கிள்கள் இனந்தெரியாத நபர்களால் கடத்திச்செல்லப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு தாளங்குடா, கிரான்குளம் ஆகிய இடங்களில் வைத்து இரு மோட்டார் சைக்கிள்களும் துப்பாக்கிமுனையில் கடத்தப்பட்டதாக பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது. (மா)

## ஓய்வுபெற்றஅதிபர்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கனிஷ்ட பிரிவின் அதிபராக பதின்மூன்றுண்டுகள் தொடர்ந்து சேவையிலீடுபட்டு 40 வருட சேவையின் பின் அண்மையில் இளைப்பாறியவர் சொக்கலிங்க ஐயர் செல்லையாக் குருக்கள் ஏரம்ப சர்மா ஆவர். ''ஐயா சேர்'' என்ருல் தெரியாதவர் எவருமே இல்லை. இது ஓர் வீட்டுப்பெயராக மாறிவிட்டது.

ஏழாலை வடக்கு குப்பிளானில் பிறந்த இவர், 1944 இல் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டார். மன்னூர் விளாங்குளம், மாத்தளை, உக்குவலை, வவனியா, தவசியாகுளம் மன்ஞர், வண்ணு மோட்டை, ஓமந்தை, மருதோடை ஆகிய இடங்களில் தலைமையாசிரியராகப் பணிசெய்து வதிரியில் செல்லையாபள்ளிக்கூடம் என்று அழைக்கப்பட்ட வடசென்றல் ஆங்கிலப் பாடசாலைற் சேர்ந்தார். 1971-இல் இருந்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் கடமை புரிந்தார்.

தனது தொழிலை ஒரு புனித பணியாகத் தலைமேற்கொண்டு தானும் படித்துப்படித்துத் தம் அறிவைப் பிள்ளைகளை மனிதனுக்கும் பணியில் பாவித்தார், படித்த அறிவுடனும் கேள்விஞானத்துடன் கற்பிக்கும் ஆற்றல் வல்லமை உள்ளவராக இருந்தார். காலையில் முந்திவருவதும், மாலையில் பிந்திப்போவதும் அவருடைய சிறப்பான இயல்பாக இருந்தது. கற்பதுடன் மாத்திரமின்றி பாடசாலை அபிவிருத்தியில் அதிபருக்கு உறுதுணையாக நன்மந்திரியாக கண்ணைக்காக்கும் இமைபோல இருந்துவந்தார். பாடசாலையின் முன்னேற்றமே தனது முன்னேற்றம், சமூகத்தின் முன்னேற்றம் எனக் கருதி அரும்பாடுபட்டு உழைத்த பெரும் பணம்படைத்தவர்.

மாணவர் மத்தியில் நல்ல பண்புகள் வளர உழைத்தார். சக ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாகவும் தோழனுகவும்விளங்கி ஏழைமாணவர்கள்பல் டரிந்து இரக்க உணர்வுடன் மனத்தளர்ச்சி இன்றி சேவைசெய்தார்.

தூயசிந்தனை, நிமிர்ந்தநடை எளியஉடை ஒளிவீசும் கண்கள் ஆழ்ந்த அடக்கம், அருட்பார்வை, எல்லோரும் நல்லாக வாழவேண்டும் என்ற நோக்கு அன்பும் பண்பும் உள்ள வாழ்க்கை, இனிய பேச்சு, உதவி செய்யும் உள்ளம் மன்னித்து மறக்கும் இயல்பு, ஈரநெஞ்சம் கொண்ட சான்ருேனுகபள்ளிக்கூடத்துடன் தன் வாழ்க்கையை இரண்டறப் பிணைத்து வாழ்ந்துகாட்டிய பெரியார் அவர்வழி நிற்பது பயனுள்ளதாகும்.

**சி. த. மார்க்கண்டு**

## கிளிநொச்சியில்

[6ம் பக்கத் தொடர்ச்சி]

டது. கொள்ளையர் கைக்குண்டைக்காட்டி, அதனுல் எறிவதாகப் பயமுறுத்தி 2,400 ரூபாவை கொள்ளையடித்துக் கொண்டு தப்பிச் சென்றனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் மூன்று பேர் தப்பிச் சென்றதாக கூறப்பட்டது.

## பெயர் மாற்றம்

(வவனியா)

வவனியா மாவட்டத்திலுள்ள செட்டிகுளம் உதவி அரச அதிபர் பிரிவிலிருந்த வேப்பங்குளம் இப்போது கோம்பகஸ்வெவ ஆக பெயர் மாறியுள்ளது. இப்பகுதியில் காணிக்கச்சேரி நடைபெற்றது உலுக்குளம் பகுதிகளைச் சேர்ந்த 95 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

## மோட்டர் சைக்கிள் கொள்ளை

(மாவிட்டபுரம்)

புலோலி நீர்வழங்கும் திட்டத்தை செயல்படுத்தும் பொறியியலாளரின் மேட்டார் சைக்கிள் கொள்ளையிடப்பட்டுள்ளது.

புலோலி நீர்வழங்கும் திட்டத்தை செயல்படுத்தும் பொறியியளாளர் ரி. இரத்தின சிங்கம் தமது மேட்டார்சைக்கிளில் வேலைசெய்யும்இடத்துக்குச்சென்றசமயம்2இளைஞர்கள் ஆயுதமுனையில் அவரது மோட்டார் சைக்கிளை கொள்ளையடித்து சென்றதாக பருத்தித்துறை பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது.

### அனுதரவாக வான்

காங்கேசன்துறை தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து கொள்ளையிடப்பட்ட வான் ஒன்று மேற்படி நிறுவனத்தின் சுன்னுகத்தில் உள்ள தொழிற்சாலை முன் அனுதரவான நிலையில் கைவிடப்பட்டிருந்ததாக காங்கேசன் துறைபொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## சுகாதார கண்காணிப்புக் குழு

(ஊரெழ)

''பொது மக்கள் ஆரம்ப சுகாதார நடவடிக்கைகளின் மூலம் நோய் களிலிருந்து தங்களைப் காப்பாற்றிக் கொள்ள முடியும் இதுவிஷயத்தில் கண்காணிப்பை ஏற்படுத்துவதற்கு அமைக்கப்பட்டிருக்கும் இந்தக் குழு மக்களுக்கு பெரிதும் உதவக் கூடியதாக இருக்கும் ஒவ்வொரு கிராமங்களிலும் இது போன்ற குழுக்கள் நிறுவப்படவேண்டியது மிகவும் அவசியம்.'

மல்லாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆரம்ப சுகாதாரக் கணகாணிப்புக் குழுவின் அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொண்டுபேசிய யாழ். மாவட்ட சுகாதாரப் போதனுசிரியர் திரு கா. வைத்தீஸ்வரன் மேற்கண்டவாறு கூறினுர்.

மேற்படி வைபவத்தில் பொதுச் சௌக்கிய பரிசோதகர் திரு. எஸ்.இராசேந்திரா பொதுச் சௌக்கிய மாது திருமதி.க பத்மநாதன் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மேற்படி குழுவின் உத்தியோகத்தர்கள் தெரிவின் போது வைத்தியக் கலாநிதி ஆ சிவபாதம், தலைவராகவும் திரு. ஜே.பி.குணரத்தினம் செயலாளராகவும் செல்வி ஐ மகாலட்சுமி பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஏழு உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு வொன்றும் அமைக்கப்பட்டது.

## எம். ஜி. ஆர்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்க சென்னை வரலாம் என டில்லியிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிகின்றன

தமிழக முதல்வர் சிகிச்சை பெற்று வரும் தனியார் மருத்துவ மனைக்கு தி மு க தலைவர் திரு மு கருணுநிதி, இந்திரா காங்கிரஸ் செயலாளர் கருப்பைய மூப்பனுர், கர்னுடக முதல்வர்ராமகிருஷ்ணசெக்டே சென்று எம். ஜி ஆரின் நிலையை கேட்டறிந்தனர்.

எம்.ஜி.ஆரை நடிகர் திலகம் சிவாஜி கணேஷன், பாக்கிய ராஜ் ஆகியோர் பார்த்தனர்.

# இன்றைய பலன்

மாதம்—ஐப்பசி
திகதி—1(17-10-1984)
வாரம்—புதன்கிழமை
திதி—ஸப்தமி முற்பகல் 10-38ன் மேல் அட்டமி
நக்ஷத்திரம் புனர்பூசம் பின் இரவு 3-01வரை

மேடம்:- சகோதர பாசம் தலைதூக்கும் அவ்வழிச் சுகமும் உண்டு முதியவர் ஒருவரின் அறிவுரைகள் முன்னேற்றத்தையளிக்கும்.

இடபம்:- மனதில் விரக்தி நிலை தென்படும் உடல் நலமும் பாதிக்கப் படலாம் கால் நடைகளினுல் நஷ்டமேற்படும் பூமிப்பிணக்குகளின் மூலம் வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்ள நேரிடும்.

மிதுனம்:- மனக்கோட்டை கட்டுவீர்கள் எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும் இன்று உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

கடகம்:- தனத்துடன் வாழ்வு இன்று தவருது கிடைக்கும் சிலருக்கு அதிஸ்டலாபங்களும் உண்டு நீண்ட நாள் கடன் நிவர்த்தியாகும்.

சிங்கம்:- ஆணவப்போக்கில் அடிசறுக்கநேரிடும் குடும்பத்தில் சிறிய பூசலுக்கும் இடமேற்படலாம்.
சகோதரர் மூலம் அவப்பெயருக்கு இடமுண்டு.

கன்னி:- வாகனச் சொந்தக்காரர்களுக்கு சிறப்பான தினம் ஆசிரியர்கள் வாழ்க்கையில் போற்றப்படுவார்கள். பொதுத் துறையிலும் நாட்டம் ஏற்படும்.

துலாம்:- புத்திரவழியால் புகழுக்கு இடமுண்டு புதிய பாதையில் நடைபோடுவீர்கள் நண்பர்களிடமிருந்து உற்சாகமான வரவேற்பு கிடைக்கும்.

விருச்சிகம்:- கௌரவத்தைப் பாதிக்கக் கூடிய சம்பவம் இடம் பெறலாம் தூற்றல் கணை கொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர் எதிலும் முன்யோசனை நன்று.

தனுசு:- பசுமையான சம்பவங்கள்நடைபெறும் களஸ்திரவழிய ல்நன்மைகள் கிடைக்கும் குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை தென்படும்.

மகரம்:- எக்கருமத்தையும் எண்ணித்துனிகஅவசரப்போக்கினுல் அருமையான சர்ந்தப்பத்தை கோட்டை விடக்கூடும் நிதானம் வேண்டும்.

கும்பம்:- இதயத்திற்கு இதயம் தரும் செய்தியொன்றும் கிடைக்கலாம். புண்ணிய கருமங்களில் விருப்பம் மேலிடும் செலவுகள் கூடுதலாக இருக்கும்.

மீனம்:- புதிய தொழில் குறித்து சிந்தனை உருவாகும் கூட்டு வியாபரத்தால் முன்னேற்றம் உண்டு புதுமனை கட்டுவதிலும் சிலரது கவனம் திருப்பப்படலாம்.

திருமலை
வே.ரவீந்திரன்

## நல்லூர் இந்து விடுதியில் திருமணங்கள் நடாத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கல்யாண மண்டபமாக இருந்து பின்னர் மாற்றப்பட்ட இந்து விடுதியில் திருமணங்கள் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் சிவன் கோவில் முகாமையாளர் பிரம்மஸ்ரீ ரட்ணகைலாசநாத குருக்கள், யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானத்துடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிவன் கோவிலில் நடக்கும் திருமணங்களுக்கு நல்லூர் இந்து விடுதியில் சாப்பாடு வசதிக்காக மண்டபத்தை பயன்படுத்தவும், இந்து விடுதியிலேயே சாப்பாடு ஒழுங்கு செய்வதற்கும் அவசியம் ஏற்பட்டால் இந்து விடுதி மண்டபத்தில் கல்யாணத்தைநடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

## ரூபவாஹினி

மாலை
5-20 உங்கள்நாடு தமிழ் நிகழ்ச்சி
5-35 கேலிச் சித்திரத் தொடர்
6-00 விஞ்ஞான நிகழ்ச்சி
6-30 ஆங்கில நிகழ்ச்சி
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 நிதியமைச்சருடன் நடந்த பேட்டி
7-45 நகைச்சுவைத் தொடர் இறுதி நிகழ்ச்சி
8-15 செய்திகள் (சிங்களம்)
8-45 ஆங்கிலத் திரைப்படம் தெற்கு பசுபிக்
10-30 உலகச் செய்திகள்
10-35 ஆங்கிலத் திரைப் படம் தொடர்ச்சி
11-30 ஒளிபரப்பு முடிவு

ஊர்காவற்றுறை
ப. நோ. கூ. சங்கம்,
ஊர்காவற்றுறை

## ஏல விற்பனை

எமது சங்க இசுசு லொறியின் கழற்றிய கூடாரம் [பொடி] 20-10-84 சனிக்கிழமை காலை 10 மணிக்கு சங்கத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விரும்புவோர் நேரில் வந்து கேள்வி மூலம் வாங்கலாம். பணம் உடன் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.

பொதுமுகாமையாளர்
15-10-84 245

## மரண அறிவித்தல்

### சின்னையா மகாலிங்கம்

இலங்கை வங்கி [யாழ்ப்பாணம்] மேற்பார்வை உத்தியோகத்தர் மகாலிங்கம் காலமானுர். அன்னுர் தவமணியின் அன்புக்கணவரும், செந்தில்நாதன் [சுகாதாரப் பரிசோதகர், அக்கராயன்குளம்], சத்தியநாதன், சோதிநாதன், சற்குணநாதன், சகுந்தலா, தவநாதன், தவமணி, மகேந்திரநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தை சின்னையா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் ஆவார். ஈமக்கிரியைகள் செருக்கைப்புலம், சுளிபுரம் இல்லத்தில் 17-10.84 இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

[253]

# தீயணைக்கும் படைநிதிக்கு ரூ 4, 37, 561 சேர்ந்தது

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகரசபையின் தீயணைக்கும் படை நிதிக்கு இதுவரை 4,37,561 ரூபா சேர்ந்துள்ளது. நிதி அன்பளிப்புச் செய்தோர் விபரம் வருமாறு:

முன் தொடர்ச்சி 421,409-50 யாழ். பல்கலைக்கழகம் 2ம் வருட விஞ்ஞானபீட மாணவர்-500-00, எஸ். ஏ. சி. அப்துல் சலாம் [சலாம்ஸ்], 95, கே. கே. எஸ். வீதி-2,000.00 எஸ். மகேந்திரன் [மலாயா கபே]-5,000 00, மத்திய சமூக நிலையம், தாவடி - 201.00, இ. மரியாம்பிள்ளை [சட்டத்தரணி]- 400.00, எஸ். இலட்சுமணன், ராணி யுவலர்ஸ்-1,000 00, த சண்முகலிங்கம்' நொதேண் இன்டஸ்றீஸ் 2 000.00, எவ். தவராசா' மின்சார நிலைய வீதி - 100.00' டி. பஞ்சரெட்ணகோபால்' கன்னாதிட்டி வீதி-250 00, ப. சாந்தராமன், கன்னாதிட்டி ஒழுங்கை - 150 00, என்.பால சுப்பிரமணியம், றஸ் றவல் சேவிஸ், ஸ்ரான்லி வீதி-500-00, உத்தியோத்தர்கள், ஊழியர்கள், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, யாழ்ப்பாணம்-1,501,00, எம். நாகராசா, சரஸ்வதிஸ்ரோர்ஸ், பெரியகடை-250 00, மத்திய சனசமூக நிலையம், தாவடி-2,300 00, மொத்தம்-437,561.50

# கல்லூரிகளில் களவுபோன பொருட்கள் பற்றிய பட்டியல்

## கல்வி அமைச்சு கோருகிறது

[கொழும்பு]

கல்விநிலையங்களில்காணாமல் போன, அல்லது கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள் பற்றிய பட்டியல்களை சமர்ப்பிக்கும்படி வடக்குகிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளின் கல்லூரிகளின் அதிபர்களை கல்விஅமைச்சு பணித்துள்ளது

இவ்விரு மாகாணங்களிலும் பாடசாலைகளிலிருந்து தட்டச்சுக்கருவிகள், ரசாயனப்பொருட்கள், ரேனியோகருவிகள் மற்றும் பொருட்கள் கொள்ளையடிக்கப்படுவது பற்றிசெய்திகள் வெளிவந்தபோதிலும் அவை பற்றிய விபரம் கல்வி அமைச்சருக்குத் தெரிவிக்கப்படுவதில்லையாம்.

பாடசாலைக் கட்டிடங்களிலிருந்து காணாமல் போகும் பொருட்கள் பற்றிவியபரங்களை கல்விஅமைச்சுக்கு அறிவிக்கவேண்டியது அதிபர்களின் பொறுப்பு என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# இவர்களுக்கும் இனிமேல் குருநகரில் ஒய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை தபாலகத்தில் ஒய்வூதியம் பெற்று வந்தவர்களும் இனி குருநகர் மக்கள் வங்கிக் கட்டிடத்திலேயே ஒய்வூதியம் பெறவேண்டும்.

தபாலகங்களில் ஒய்வூதியம் பெற்று வந்தவர்களுக்கு துரையப்பா விளையாட்டரங்கில் ஒய்வூதியம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமயத்திலும் கூட வண்ணார்பண்ணை தபாலகத்தில் ஒய்வூதியம் பெற்றவர்களுக்குத் தொடர்ந்து ஒய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது,

இப்பொழுது துரையப்பா விளையாட்டரங்கில் ஒய்வூதியம் பெற்றவர்கள் குருநகர் மக்கள் வங்கிக் கட்டிடத்தில் ஒய்வூதியம் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது போல் வண்ணார்பண்ணை தபாலகத்தில் ஒய்வூதியம் பெற்றவர்களுக்கும் குருநகரிலேயே ஒய்வூதியம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று வண்ணார்பண்ணை தபாலதிபர் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### முத்துவேலு அழகரத்தினம் இரத்தினம்

முத்துவேலு அழகரத்தினம் இரத்தினம் காலமானார். இவர் காலம்சென்ற அன்னஇரத்தினம்மாவின் அன்புக் கணவரும், கிறேஸ் பொனி, ஜோஜ் குணரத்தினம், மலர் போல், புஸ்பம் தம்பையா, காலம் சென்ற எட்வேட் செல்வரத்தினம். பிறின்ஸ் இரத்தினம் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் 17-10-84 புதன்கிழமை இன்று 4 மணிக்கு அவரது இல்லத்தில் (T. A. தம்பியப்பா, ''ஆக்லேன்'', உடுவில்) நடைபெறும். 261

## மரண அறிவித்தல்

### சீவரெட்ணம் – மைக்கேல் சாமுவேல்

[இளைப்பாறிய அரசாங்க பிரதம கணக்காளர்)

சீவரெட்ணம் - மைக்கேல் சமுவேல் [இளைப்பாறிய அரசாங்க பிரதம கணக்காளர்] காலமானார் இவர் காலம் சென்ற சுகாதம்மாவின் அன்புக்கணவரும், ஹரிச்சந்திரன் [U. K ], இராசேந்திரன் [கோண்டாவில்], தெய்வேந்திரன் [அவுஸ்திரேலியா] இவர்களின் அன்புத் தந்தையும்; மங்கையற்கரசி, இராசமலர். ஜெயராணி ஆகியோரின் மாமனாரும் மோகன், சாமினி, காமினி, நந்தினி, டானியல், ஜெயந்திரன், ஜெயக்குமார் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் மரணச் சடங்குகள் சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு ஸ்ரேசன் றோட், கோண்டாவிலில் நடைபெற்று தாவடியில் அடக்கம் செய்யப்படும். 257

இப் பத்திரிகை ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegramnumber Telephone 22389 - 24126.

# சீயாக்காய் கிலோ 85 ரூபா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சீயாக்காய்க்கு பெரும்தட்டுப்பாடு ஏட்பட்டுள்ளது.

சில கடைகளில், மட்டும் சிகைக்காய் கிலோ 85 ரூபாவாகவிற்பனை செய்யப்படுகிறது. (க)

# நாளைமறுதினம் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை உத்தியோகத்தர்களின் கலந்துரையாடல் இம்மாதம் 19ம் தேதி காலை பதினொருமணிக்கு யாழ். மாநகரசபை குழுக் கூட்ட அறையில் நடைபெறவிருக்கிறது. (க)

# கிராமியவங்கியில் சம்பளம்பெற விருப்பம்

(கரவெட்டி)

நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் அனைவரும் தமது சம்பளப்பணத்தை கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தில் பெறுவதற்கு விரும்பியுள்ளனர்.

இதற்காக இவர்கள் இச்சங்கத்தின் கூட்டுறவுக் கிராமிய வங்கியில் வைப்பாளர்களாகத் தம்மைப் பதிவு செய்துள்ளார்கள்.

# வான் கடத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இரசாயனப் பொருட்களை ஏற்றிக்கொண்டு சென்ற 'மிட்சுபிசி' வான் ஒன்றைச் சங்கானையில் வைத்து, இனந்தெரியாத ஆயுதந்தாங்கிய இளைஞர்கள் கடத்திச் சென்றுள்ளனர். (மா)

# குருநகரில் ஒய்வூதியம்

[யாழ்ப்பாணம்]

வடபகுதியில் ஒன்பது உப தபாற்கந்தோர்கள் மூலம் இதுவரை வழங்கப்பட்டு வந்த ஒய்வூதியம் இனிமேல் குருநகரிலுள்ள மக்கள் வங்கிக் கிளையிலேயே வழங்கப்படவிருக்கிறது.

சங்கானை, கைதடி, வேலணை நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு கோப்பாய், வண்ணார்பண்ணை, வசாவிளான் ஆகிய ஒன்பது தபாலகங்களில் வழங்கப்பட்ட ஒய்வூதியம் இனிமேல் குருநகரில் வழங்கப்படும்.

இவர்களுக்கு இம்மாதம் 22ம் திகதி ஒய்வூதியம் குருநகரில வழங்கப்படும்

# இப்படியும் நடக்கிறது

'யாழ்தேவி' என்றால், யாழ்ப்பாணத்துக்குப் பெரும் சொத்து.

'இது' அந்தக்காலம் அந்தக்காலம் என்றால் ...... 'யாழ் தேவி' யாழ்ப்பாணம் வந்து விட்டால் போதும். இப்பொழுது என்ன நேரம் என்று கைக்கடிகாரத்தைப் பார்க்காமலே நேரத்தைக் கணிப்பிடலாம்.

இதனைச் சற்று மேலும் விபரிப்ப தென்றால்...... 'யாழ் தேவி' யாழ்ப்பாணம் வரும்—போகும் நேரத்தை வைத்துக் கொண்டே பாடசாலை மாணவர்கள் முதல் அரசாங்க, தனியார் ஊழியர்கள் மட்டுமின்றி பொதுமக்களும் தங்களது நேரத்தை கணிப்பது உண்டு. ஆனால் இன்று......?

யாழ்ப்பாணத்திலிருந்து 'யாழ்தேவி' புறப்படுவது பகல் இரண்டு பத்துக்குத்தான்.

'இது' கொழும்பு போய்ச் சேருவது..... பத்துமணி... பதினொருமணி... பன்னிரண்டு மணி...!

சில நாட்களில் அதிகாலை இரண்டு மணிக்கும் தலைநகர் போய்ச் சேருவதுண்டு.

இதில் என்ன விசேஷம் தெரியுமோ ?

'யாழ்தேவி' கோட்டைவந்து சேர்ந்ததும் அது என்ன நேரம் என்றாலும் சரி; யாழ். பிரயாணிகள் உடனடியாகவே ரயில் நிலையத்திலிருந்து வெளியேற்றப் படுகிறார்களாம்!

அதாவது; 'யாழ்தேவி' அதிகாலை இரண்டு மணிக்கு கோட்டைக்கு வந்தாலும்... ''நீங்கள் ரயில் நிலையத்துக்குள் இருக்கக் கூடாது. டிக்கட்டைக் கொடுத்துவிட்டு வெளியேற வேண்டும்'' என்று அங்குள்ள சிலரினால் பணிக்கப்படுகிறார்களாம்!

'யாழ்தேவி' அன்று வந்த நேரம் என்ன. இன்று போகும் நேரம் என்ன... போனாலும் ஏற்படும் கதி என்ன.....?

— 'ஊடுருவி'

# 'மார்க்பெட்' நிறுவன 'ஜீப்'கடத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

'மார்க்பெட்' நிறுவனத்தின் ஜீப்பை இனந்தெரியாத இரு இளைஞர்கள் இயந்திரத்துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி நேற்முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் கடத்திச் சென்றுள்ளனர்.

யாழ். றீகல் தியேட்டருக்கு அருகாமையில் வைத்தே இந்த ஜீப்வண்டி கடத்தப்பட்டது.

இந்த ஜீப்வண்டியிலிருந்த சாரதியையும், அதிகாரியையும் இளைஞர்கள் யாழ். கோம்பயன்மணல் மயானத்திற்கு

(5-ம் பக்கம் பார்க்க)

# மற்றுமொருவருக்கு 'மரணதண்டனை'

(சாவகச்சேரி)

தமிழீழ விடுதலைப் போராளிகளைக் காட்டிக்கொடுத்ததாகத் தெரிவிக்கப்பட்ட சாவகச்சேரி சிவன் கோவிலடியைச் சேர்ந்த 'பினான்ஸ் பாபு' என்று அழைக்கப்படும் செல்லத்துரை (வயது 50) என்பவர் நேற்றுக் காலை 10 மணியளவில் சாவகச்சேரி பஸ் நிலையத்திலுள்ள சிமெந்துத் தூணில கட்டப்பட்டுச் சுடப்பட்டார்

இவரது தலையில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்கள் காணப்பட்டதுடன், தலையிலருந்து இரத்தம் வடிந்தோடிக்கொண்டிருந்தது.

செல்லத்துரையின் மரணத்தினை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உரிமை கோரியுள்ளதுடன், 'சுடுபட்டு மரணமானவர் முன்னாள் உதவிப் பொலஸ் இன்ஸ்பெக்டராக இருந்தவரெனவும், சில காலம் பிரான்ஸ் கம்பெனி ஒன்றில் பணிபுரிந்தவரெனவும் தெரிய வந்துள்ளது.

நேற்றைய தினம் நண்பகல் 12 மணியளவில் சாவகச்சேரிப் பொலிசார் ஸ்தலத்துக்குத் திடீரென வந்து சுடுபட்டு மரணமானவரின் நெஞ்சில் கட்டப்பட்டிருந்த அட்டையைப் பிடுங்கிச் சென்றனராம்.

# ஆந்திரா அமைச்சரவை விஸ்தரிப்பு

(ஹைதராபாத்)

ஆந்திரப்பிரதேச அமைச்சரவை இன்று விஸ்தரிக்கப்படுமென்று முதலமைச்சர் திரு. என். டி. ராமராவ் தெரிவித்தார்.

ஆந்திர அமைச்சரவையில் தற்போது பத்துப்பேருள்ளனர். (வெ)

# எம். ஜி. ஆர். சுகமடை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## நெடுஞ்செழியன் வேண்டுகோள்

முதலமைச்சர் திரு. எம் ஜி ராமச்சந்திரனின் உடல்நிலை திருப்திகரமாகவுள்ளதால், கட்சித் தொண்டர்களை தீக்குளிப்பு போன்ற சம்பவங்களில் ஈடுபடவேண்டாமென்று தமிழ்நாடு நிதியமைச்சர் திரு. ஆர். நெடுஞ்செழியன் கேட்டுள்ளார்.

## விசேட தொழுகை

திரு, எம். ஜி. ராமச்சந்திரன் விரைவில் குணமடை வேண்டுமென்று பிராத்தித்து, தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று விசேடதொழுகை நடத்தப்பட்டது. பல்வேறு இந்து ஆலயங்களிலும், தேவாலயங்களிலும் திரு. எம், ஜி. ராமச்சந்தி விரைவில் குணமடைய வேண்டுமென்பதற்காக விசேட பூஜைகள் நடத்தப்பட்டன.